# ஐந்து முக்கியச் செய்திகள்

உங்கள் குழந்தையுடன் பேசுவது மிகவும் முக்கியமானது, ஏனென்றால் அவர்கள் உங்களிடமிருந்து பெரும்பாலான விஷயங்களைக் கற்றுக் கொள்கிறார்கள்.

உங்கள் குழந்தையுடன் ஆரம்பத்தில் இருந்தே பேசுங்கள்.குழந்தைகள் உங்கள் குரலைக் கேட்கவும், அவர்களுடன் பேசும்போது உங்கள் முகத்தைப் பார்க்கவும் விரும்புகிறார்கள்.

உங்கள் குழந்தையுடன் பேசுவது அவர் மகிழ்ச்சியாக இருக்கவும், நண்பர்களை உருவாக்கிக் கொள்ளவும், கற்றுக்கொள்ளவும் உதவும்.

இசை, சத்தமான வீடியோ கேம்கள் மற்றும் தொலைக்காட்சி ஆகியவை நம் வாழ்வின் ஒரு பெரிய அங்கமாகும், ஆனால் சத்தமில்லாத நேரத்தை உருவாக்க முயற்சி செய்யுங்கள், இதனால் நீங்கள் சொல்வதை உங்கள் குழந்தையால் கேட்க முடியும்.

பேசுவது எளிதானது - நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பற்றி அல்லது அவர்களுக்கு ஆர்வமான விஷயங்களைப் பற்றி அவர்களிடம் பேசினாலே போதும்.

## மொழியைப் பற்றிய உரையாடலை *மாற்றுதல்*

ROYAL COLLEGE OF SPEECH & LANGUAGE THERAPISTS

easy PEASY

I CAN helps children communicate

PC_5 Key.indd 1 05/03/2019 11:0